சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

3ம் தவணை விடுமுறைக் கால செயலட்டை 01 - 2020

தரம் - 10 வரலாறு

உலர்வலய புராதன நாகரிகங்களின் வீழ்ச்சியும் தென்மேற்கில் புதிய இராச்சியங்களின் தோற்றமும்

01)பின்வரும் வினாக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

01.அநுராதபுரத்தை நிர்வாக தலைநகராக்கியவன் விஜயன் ஆவான். ( )

02.பண்டைய இலங்கையில் மாகம நீண்ட காலமாக உருகுணை பழரதேச தலைநகராக இருந்துள்ளது. ( )

03.பண்டைய இலங்கை கிராமிய மக்கள் விவசாயத்தையும் மந்தை வளர்ப்பையும் தமது வாழ்வாதரமாக கொண்டிருந்தனர். ( )

04.சமூகமொன்றில் மிகை உற்பத்தி காணப்பட்ட போது அவ்வுற்பத்தியின் உடைமையாளர் கூட்டம் ஒன்று பண்டைய இலங்கையில் உருவானது. ( )

05.பண்டைய இலங்கையில் முதலாம் நகராக்கம் எனப்படுவது அனுராதபுர நகராக்கமே ஆகும். ( )

02.கீறிட்ட இடங்களை நிரப்புக.

01.இலங்கையில் மிக நீண்ட காலமாக புகழ் பெற்று விளங்கிய நகரங்களாக………………… ,………………. ஆகிய இரண்டும் விளங்குகின்றன.

02.பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டு பணக்காரர்கள், ஏழைகள் என பிரிபடுதல் …………………… எனப்படும்.

03.முதலாம் விஜயபாகு மன்னனின் மறைவையடுத்து இலங்கையிலிருந்த……………………வம்சத்தவருக்கும் ……………………வம்சத்தவர்க்கும் இடையில் அதிகாரப் போட்டி உக்கிரமடைந்தது.

04.அநுராதபுரம், மாகம ஆகிய இரு நகரங்களினதும் வளர்ச்சியானது………………………ஆண்டிலிருந்தே ஆரம்பத் தன்மையைக் கொண்டிருந்தது.

05.தென் கிழக்காசிய நாடுகளின் கலைப்பண்புகள் இலங்கையில் செல்வாக்கு செலுத்தியுள்ளமைக்கான எடுத்துக்காட்டுகளாக ………………………………… ,……………………………………. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

03.பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01.இலங்கையில் உலர்வலயத்தில் நகரங்கள் தோன்றியமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

02.ஒரு முறையான நகரமொன்று தோன்றுவதில் செல்வாக்கு செலுத்திய அடிப்படைக் காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

03.ஒரு நகரத்திற்குரிய அனைத்து கூறுகளையும் கொண்ட ஆட்சி நிலையமாக அநுராதபுரம் மாறுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

04.ஆரம்ப கால கிராம மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய அம்சங்கள் எவை?

05.ஆரம்ப கால கிராம மக்களின் வாழ்க்கை இணக்கமான அமைதித் தன்மையைக் கொண்டிருந்தமைக்கான காரணம் யாது?

06.மிகை உற்பத்தி என்றால் என்ன?

07.மிகை உற்பத்திற்கு உடைமையாளர் புராதன சமூகத்தில் வாழந்தார்கள் என்பது தொடர்பான உதாரணம் எந் நூலில் காணப்படுகிறது? ஆந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாது?

08.கிராமத்தில் தலைமைப் பதவியைக் கொண்டவரிடம் காணப்பட்ட பிரதான தகுதி யாது?

09.பிரதேச தலைவர்கள் பற்றி கல்வெட்டுக்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன?

10.மிகை உற்பத்தியைக் கொண்டிருந்த பிராந்திய பிரபுக்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள், மணிகள் என்பவற்றை பயன்படுத்தியமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற பழைய இரு நகரங்களும் எவை?

11.நகரம் எனும் போது அவற்றினுள் உள்ளடங்கும் விடயங்கள் எவை?

12.அநுரராதபுரம் இலங்கையின் தலைநகரமாக எத்தனை ஆண்டு காலம் விளங்கியது?

13.இந்து சமுத்திரத்தில் நடைபெற்று வந்த சர்வதேச வரத்தகம் அராபியரின் வர்த்தகர்களின் கைகளுக்கு மாறிய நூற்றாண்டு யாது?

14.இந்து சமுத்திரத்தின் மேற்குப் பகுதியின் வர்த்தக நடவடிக்கைகளில் இணைந்து கொண்ட ஆசிய பகுதிகள் இரண்டும் எவை?

15.இந்து சமுத்திரத்தின் வர்த்தகம் கிழக்குப் பகுதியை மையமாககம கொண்டு செயற்பட்ட நூற்றாண்டு எது?

16.பொலன்னறுவை தலைநகரமாக வளர்ச்சியடைய உதவிய காரணிகள் எவை?

17.பொலன்னறுவையை நிர்வாக தலைநகரமாகத் தெரிவு செய்த மன்னன் யார்?

18.முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலப்பகுதியில் நிலவிய சமூக நிலை, வெளிநாட்டு தொடர்பு பற்றி விளக்குக.

19.அநுராதபுர இராசதானியின் இறுதி ஆட்சியாளன் யார்?

20.அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

04.பின்வரும் புராதன நகரங்கள் மற்றும் நதிகளின் புதிய பெயர்களை எழுதுக.

1.மகாநதி –

2.கதம்பநதி –

3.அனுராதகம –

4.புலஸ்தி நகரம் -

5.கிரிந்த நதி –

6.மாகம நகரம் -

05.பின்வரும் இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை கீறிட்ட இடங்களில் எழுதுக.

